DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 187/2019

List of Witness : Lw6

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | குப்புச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஆறுமுக கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/08/2024

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பெரியகோட்டையில் தோட்டத்துச்சாலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 11.08.2019 ம் தேதி மக்காசோள விளம்பரத்திற்காக போய் இருந்த பார்ட்டிகள் இடையே பிரச்சனை வந்தது. அன்றைய தினம் அம்பிளிக்கை காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்து ரெட்டிபட்டி காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் உள்ள சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். எங்களிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும், என்னுடன் கருப்புச்சாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வைமகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

போலீசார் என்னை 11.08.2019 ம் தேதி மாலை 6.45 மணிக்கு காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் வைத்து விசாரித்தார்கள். காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் என்னை விசாரிக்காமல் வேறு இடத்தில் வைத்து என்னை விசாரித்து இருந்தால் அந்த வாக்குமூலம் பொய் என்று சொன்னால் சரிதான். நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கையொப்பம் செய்துள்ள பார்வைமகசரில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஏழாம் வகுப்பு வரை படித்து இருந்தும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு ஏன் தெரியவில்லை என்றால் நான் எதுவுமே எழுதப்படாத வெள்ளைதாளில் அம்பிளிக்கை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததால் தான் என்னால் விவரங்கள் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. மக்காசோள விளம்பரத்திற்காக வந்த நபர்களை நான் அழைத்து வரவில்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.14 17:17:26 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/08/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 187/2019

List of Witness : Lw7

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கருப்புச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சங்கிலியப்ப கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/08/2024

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பெரியகோட்டையில் தோட்டத்துச்சாலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 11.08.2019 ம் தேதி ரெட்டிபட்டி காளியம்மன் கோவில் பின்பக்கம் அம்பிளிக்கை காவல்நிலைய போலீசார் வந்து ஏதோ பிரச்சனை நடந்தது தொடர்பாக படம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும், குப்புச்சாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலீசார் என்னை விசாரித்த போது எந்த விவரமும் தெரியாது என்று சொன்னேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் எதுவுமே எழுதாத வெள்ளைத்தாளில் அம்பிளிக்கை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததால்தான் எனக்கு எந்தவிவரமும் தெரியாது என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.14 17:17:32 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/08/2024